




இராணிப்பேட்டை மாவட்டம் வாலாஜா ஊராட்சி ஒன்றியம் கடப்பேரி ஊராட்சி ராமாபுரம் கிராமத்தில் நடந்த கிராம சபைக் கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக அமைச்சர் ஆர்.காந்தி கலந்து கொண்டு பொதுமக்களிடம் உரையாற்றினார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ஜே.யு.சந்திரகலா, மாவட்ட வருவாய் அலுவலர் தனலிங்கம், மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் ஜெயந்தி திருமூர்த்தி, சேஷா வெங்கட்ரமணன், சண்முகம் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



கரூர் த.வெ.க. கூட்ட நெரிசலில் சிக்கி இறந்த 41 பேரின் குடும்பத்தினருக்கு விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் தலா ரூ.50,000த்தை அக்கட்சியின் தலைவரும், எம்.பி.யுமான தொல். திருமாவளவன் வழங்கினார். உடன் கரூர் சட்டமன்ற உறுப்பினர் மற்றும் மாவட்டக் கழகச் செயலாளர் வி.செந்தில் பாலாஜி மற்றும் வி.சி.க. நிர்வாகிகள் உள்ளனர்.

### தஞ்சாவூர் வடக்கு மாவட்டம்–


# திருவிடைமருதூர் தொகுதி கழக சார்பு அணி நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம்!

## அமைச்சர் – முனைவர் கோவி.செழியன் அறிக்கை!

தஞ்சாவூர், அக்.13-

மாநில வர்த்தகர் அணி துணைத் தலைவர் - அமைச்சர் முனைவர் கோவி. செழியன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு

தஞ்சாவூர் வடக்கு மாவட்டம், திருவிடை மருதூர் சட்டமன்ற தொகுதி தி.மு.க. சார்பு அணிகளின் நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம் குறித்து தஞ்சாவூர் வடக்கு மாவட்டம், திருவிடை மருதூர் சட்டமன்ற தொகுதி தி.மு.க. சார்பு அணிகள் நிர்வாகிகள் கலந் துரையாடல் கூட்டம் இன்று (13.10.2025 திங்கள் கிழமை) நடைபெற உள்ளது.



தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திருவிடைமருதூர் வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு, திருப்பனந்தாள் கிழக்கு, மேற்கு, மத்திய, கும்பகோணம் கிழக்கு, மத்திய ஒன்றியம் மற்றும் பேரூர் அமைப்பாளர்கள்,துணை கலந்துரையாடல் அமைப்பாளர்கள் பங்கேற்கும் கூட்டம் திருவிடைமருதூர் கலைஞர் பாசறையில் மாவட்ட கழக பொறுப்பாளர் சாக்கோட்டை திரு.க. துறை அன்பழகன் MLA, மாண்புமிகு உயர்கல்வித் அமைச்சர் முனைவர் கோவி. செழியன், கல்யாணசுந்தரம் MP, கழக சட்ட திட்டத்திருத்தக் திருமிகு. செ. இராமலிங்கம் B.A., Ex .MP, குறிஞ்சிவாணன் தொகுதி பொறுப்பாளர் ஆகியோர் நடைபெற உள்ளது. அதன் விவரம்பின்வருமாறு:

**13.10.2025 திங்கட்கிழமை**

**நேரம் அணிகள்**

காலை 9.00 மணி - மகளிர் அணி

காலை 10.00 மணி - மகளிர் தொண்டர் அணி

காலை 11.00 மணி - விவசாய அணி

நண்பகல் 12.00 மணி - இலக்கிய அணி

பிற்பகல் 3.00 மணி - தொண்டர் அணி

மாலை 4.00 மணி - விவசாய தொழிலாளர் அணி

மாலை 5.00 மணி - அயலக அணி

மாலை 6.00 மணி - மீனவர் அணி

எனவே இக்கூட்டத்தில் மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், கிளைக் கழக செயலாளர்கள், பாக முகவர்கள், BLA2, BDA முகவர்கள் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில்,

# தமிழ்நாடு பாரம்பரிய கலை நிகழ்ச்சிகள்!

## ஏராளமான பொதுமக்கள் பார்வையிட்டு மகிழ்ந்தனர்!

சென்னை,அக்.13-

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதியில் உள்ள மெரினா கடற்கரை, பெசன்ட் நகர் கடற்கரை, திருவான்மியூர் கடற்கரை உள்ளிட்ட அனைத்து கடற்கரைப் பகுதிகளில் மக்களின் வசதிக்காகவும், சிறந்த சுற்றுச் சூழலை ஏற்படுத்திடும் வகையிலும், பல்வேறு கட்டமைப்பு வசதிகளும், மேற்கொள்ளப்பட்டு தூய்மையாகப் பராமரிக்கப்பட்டு வருகிறது.

மெரினா கடற்கரையில், மொரினா நீச்சல் குளம் அமைந்துள்ள பகுதியில் உலகத்தரம் வாய்ந்த நீலக்கொடி சான்றுக்கான மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, இந்த நீலக்கொடி கடற்கரைப் பகுதிக்கு, மக்கள் பெருமளவில் வருகை தருகின்றனர். இந்நிலையில், இங்கு வரும் மக்களின் மகிழ்விற்காகவும், தமிழ்நாட்டின் பாரம்பரியக் கலைகளை மக்களிடம் கொண்டு செல்லும் வகையிலும், இந்த கலைகளை மக்களிடம் கொண்டு செல்லும் கலைஞர்களுக்கு ஆதரவளித்து அவர்களை ஊக்கப்படுத்திடும் வகையிலும் பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில், மெரினாவில் உள்ள நீலக் கொடி கடற்கரைப் பகுதியில், தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளிலும் உள்ள நாட்டுப் புறக் கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகள் 21.09.2025 அன்றும், 05.10.2025 அன்றும் சிறப்பாக நடைபெற்றது.

இந்த கலை நிகழ்ச்சியினை ஆயிரக்கணக்கான பொதுமக்கள் பார்வையிட்டு மகிழ்ந்தனர். அதன் தொடர்ச்சியாக இன்று (12.10.2025) தமிழ் நாட்டில் பல்வேறு பகுதிகளிலும் உள்ள நாட்டுப்புறக் கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

இந்த கலை நிகழ்ச்சியில், தேனி மாவட்டம், ஆண்டிப் பட்டி செல்லச்சாமி கலைக்குழுவினரின் வெற்றியை கொண்டாடும் வீரர்களின் நடனம், தாளம், அசைவுகள், உற்சாகம் நிறைந்த பாரம்பரிய கலை தேவராட்டமும், திருநெல்வேலி முகமது சுபஹான் கலைக்குழுவினரின் தமிழரின் பழம்பெரும் போர்க்கலை. சிலம்பின் சுழலும் ஒலி வீரத்தை வெளிப்படுத்தும் சிலம்பாட்டமும், தஞ்சாவூர் வினோத் கலைக்குழுவினரின் தப்பின் தாளத்தில் ஆடும் உற்சாக நடனம் கொண்டாட்டங்களின் முக்கிய கலையான தப்பாட்டமும், தர்மபுரி மாவட்டம் ஸ்ரீதரன் கலைக்குழுவினரின் கோயில் திருவிழாக்களில் ஒலிக்கும் இரட்டை முரசு இசை, ஆனந்தம் மற்றும் பக்தி கலந்த கலையான பம்பை வாத்தியமும் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டம் முருகன் கலைக்குழுவினரின் கொங்கு மண்டல பகுதிகளில் திருவிழாக்களில் பெரிய மேளங்களை அடுத்துக் கொண்டும் இசைக்கு ஏற்றவாறு ஒரு குழுவினர் ஆடப்படும் ஆட்டம் துடும்பாட்டம் உள்ளிட்ட கலை நிகழ்ச்சியும் நடைபெற்றது.

இந்த கலை நிகழ்ச்சிகளில் 60க்கும் மேற்பட்ட கலைஞர்கள் பங்கேற்று சிறப்பாக கலை நிகழ்ச்சிகளை நடத்தினர்.

நேற்று (12.10.2025) மாலை 6 மணி முதல் மூன்று மணி நேரம் மெரினா நீல க்கொடி கடற்கரைப் பகுதியில் நடைபெற்ற இந்த கலை நிகழ்ச்சியினை நேரடியாக ஆயிரக்கணக்கான மக்கள் பார்வையிட்டு மகிழ்ந்தனர்.

இந்த பாரம்பரிய கலைநிகழ்ச்சிகள் ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக்கிழமையன்று பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் நடத்தப்படுகிறது.



கழகச் சட்டத்துறை இணைச் செயலாளர் வழக்கறிஞர் இ.பரந்தாமன் எம்.எல்.ஏ. ஏற்பாட்டில் எழும்பூர் தொகுதியில் நடந்துவரும் "திராவிடம் செய்தது என்ன? வாங்க பேசுவோம்" எனும் முன்னெடுப்பின் கலந்துரையாடல் கூட்டம் வார்டு எண். 61, ஈ.வெ.ரா. பெரியார் சாலை, வரதராஜுலு தெரு, டாக்டர் சந்தோஷ் நகர் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்பு வளாகத்தில் நடந்தது. இக்கூட்டத்தில் கலந்துகொண்ட அப்பகுதி இளைஞர்கள் இத்தலைப்பு குறித்துக் கேட்ட கேள்விகளுக்கு இ.பரந்தாமன் பதில் அளித்து, அவர்களுக்குத் திராவிடம் குறித்த மூன்று நூல்களைக் கொண்ட தொகுப்பைப் பரிசாக அளித்தார்.



சைதாப்பேட்டை தொகுதி 170, 170 அ வட்டம் பாக முகவர்கள் (BLA2) கூட்டம் வட்டச் கழக செயலாளர்கள் கோட்டூர் கோ.சண்முகம், க.மணி ஏற்பாட்டில் கோட்டூரில் நடைபெற்றது இதல் பகுதி கழக செயலாளர் இரா. துரைராஜ் எம்.சி. தொகுதி மேலிடப் பார்வையாளர் கே.எஸ்.ரவிசந்திரன் ஆகியோர் சட்டமன்றத் தேர்தல் பணிகள் சம்பந்தமாக ஆலோசனை வழங்கி பேசினர். உடன் மின்னல் கந்தப்பன், இ.முருகேசன், கோட்டூர் எஸ்.பிரகாஷ், நா.மணிகண்டன், எஸ்.ஜே.சலாம், கோட்டூர் என்.பாபு, கே.எம்.எஸ்.கணேசன், எஸ்.கர்ணன், மு.பலராமன், மு.மகேஷ்லாரன்ஸ், கே.பன்னீர்செல்வம் வட்ட கழக நிர்வாகிகள் அணிகளின் நிர்வாகிகள் மூத்த முன்னோடிகள் பாக முகவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### கரூர் துயர சம்பவம்:

# உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு நிதி உதவி!

## தொல்.திருமாவளவன் எம்.பி. வழங்கினார்! வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. முன்னிலை!

கரூர், அக்.13 -

தமிழ்நாடு வெற்றிக் கழகம் - விஜய் கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு தலா. ரூ. 50 ஆயிரம் நிதியை வி.சிக. கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் எம்.பி. கரூர் சட்டமன்ற உறுப்பினர் செந்தில் பாலாஜி முன்னிலையில் வழங்கினார்.

கடந்த மாதம் 27ஆம் தேதி இரவு கரூரில் விஜய் பிரச்சார கூட்டத்தின் போது ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் நிவாரண உதவியாக தலா ரூ.50 ஆயிரம் வழங்கும் நிகழ்ச்சி கரூரில் நடைபெற்றது. வி.ச.க. தலைவர் தொல் திருமாவளவன் தலைமை வகித்து 41 பேரின் குடும்பத்தினருக் கும் நிவாரண உதவிகளை வழங்கினார்.

கரூர் சட்டமன்ற உறுப்பினர், கரூர் மாவட்ட கழக செயலாளர் வி. செந்தில் பாலாஜி முன்னிலை வகித்தார். பின்னர் தொல்.திருமாவளவன் எம்.பி. செய்தியாளர்களடம் கூறியதாவது,:

பாதிக்கப்பட்டவர்களில் சிலர் தங்களுக்கு அரசு வேலை வழங்க வேண்டும் என கோரிக்கை விடுத்தனர். முதல்வரின் கவனத்திற்கு இதை கொண்டு செல்வோம் . பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிடும் வகையில் முதல்வர் மு க ஸ்டாலின் அவர்கள் மிகுந்த அக்கறையுடன் செயல்பட்டார்கள் என்பதை நாடறியும். காயம் அடைந்தவர்கள், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினரையும் உடனடியாக சந்தித்து நிவாரண உதவிகளையும் வழங்கியுள்ளார்கள். அதைப்போல முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி பாதிக்கப்பட்டுள்ள வீடுகளுக்கு நேரில் சென்று ஆறுதல் கூறியிருக்கிறார். நிவாரண உதவித் தொகையையும் வழங்கி இருக்கின்றார். இவ்வாறு அவர் கூறினார்.

### சிவகங்கை முதல் நகர்மன்ற தலைவர் –

# கழக முன்னோடி சொ.லெ. சாத்தையா மறைவு!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் அஞ்சலி


சிவகங்கை,அக். 13-

சிவகங்கை மாவட்டம் சிவகங்கை முதல் நகர் மன்ற தலைவர் - கழக முன்னோடி சொ.லெ.சாத்தையா அவர்கள் (வயது 90) மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

சிவகங்கை நகராட்சியின் முதல் நகர் மன்ற தலைவராக சொ.லெ.சாத்தையா மக்கள் ஆதரவுடன் அதிக வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார்.இவர் கழகத்தின் மூத்த முன்னோடி ஆவார் .இவர் நகர் மன்ற தலைவராக பொறுப்பு வகித்த காலத்தில் சிவகங்கை நகரில் கடும் குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டது. அப்போதைய முதல்வர் தலைவர் கலைஞரை நேரில் சந்தித்து மானாமதுரை தாலுகா இடைக்காட்டூர் வைகை ஆற்றில் இருந்து சிவகங்கை நகர் மக்களுக்கு குடிநீர் வசதி செய்து தரவேண்டும் என்று கோரிக்கை வைத்தார். அவரது கோரிக்கையை ஏற்று முதல்வர் தலைவர் கலைஞர் சிவகங்கை நகருக்கு இடைக்காட்டூரிலிருந்து பாதுகாக்கப்பட்ட வைகை தண்ணீர் வழங்கினார். சிவகங்கை மக்களின் தாகம் தீர்த்த தலைவர் என்று அழைக்கப்பட்டார். இரண்டு மாதங்களுக்கு முன்பு கழக இளைஞரணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிவகங்கையில் சுற்றுப்பயணம் மேற்கொண்டபோது கழக மூத்த முன்னோடி சாத்தையாவை அவரது இல்லத்தில் சந்தித்து உடல் நலம் விசாரித்து அவரிடம் வாழ்த்துப் பெற்றார்.

சாத்தையாவிடம் அவர் கட்சிக்காக ஆற்றிய பணிகள், சிறை சென்ற அனுபவங்களை கேட்டறிந்தார். சொ.லெ.சாத்தையா வயது முதிர்வால் நேற்று காலை மறைவெய்தினார். இவரது மனைவி லீலாவதி கடந்த மே மாதம் மறைவெய்தி னார். சாத்தையாவிற்கு ஒரு மகன் மூன்று மகள்கள் உள்ளார்கள். சொ.லெ.சாத்தையா அவைத்தலைவராகவும், செயற்குழு உறுப்பினராகவும் நகர் மன்ற தலைவராகவும் பதவி வகித்துள்ளார் . பேரறிஞர் அண்ணா, முதல்வர் தலைவர் கலைஞர் பேராசிரியர் கழகத்தலைவர் முதல்வர் தளபதி, சிறுகதை மன்னன் எஸ். எஸ்.தென்னரசு, பசும்பொன் தா.கிருட்டிணன், காரைக் குடி சித. சிதம்பரம் மற்றும் கழக முன்னோடி களுடன் நெருங்கிய தொடர்பில் இருந்த சிவகங்கை மாவட்டத்தில் கழகத்தின் வளர்ச்சிக்காக அயராது பணி யாற்றியவர் .

மறைந்த சாத்தையாவின் உடலுக்கு மாவட்ட கழகச் செயலாளர் கூட்டுறவு துறை அமைச்சர் கே ஆர்.பெரிய கருப்பன், சிவகங்கை நகர் கழக செயலாளர் சி.எம்.துரை.ஆனந்த், மாவட்ட கழக செய்தி தொடர்பாளர் அ.அயூப் கான் ஒன்றிய துணை செயலாளர் எஸ்.முத்துகுமார் மற்றும் கழக நிர்வாகிகள் நகர் மன்ற உறுப்பி னர்கள் பல்வேறு அரசியல் கட்சி நிர்வாகிகள் மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்கள்.



சொ.லெ.சாத்தையா. வின் இறுதிச் சடங்கு இன்று திங்கட்கிழமை காலை 11மணிக்கு சிவகங்கையில் அவரது இல்லத்தில் நடைபெறுகிறது.

### சிவகங்கை கழக முன்னோடி

# சொ.லெ. சாத்தையா மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, அக்.13–

சிவகங்கை நகர முதல் நகர்மன்றத் தலைவரும், கழக முன்னோடியுமான சொ.லெ. சாத்தையா (வயது 90) அவர்கள் நேற்று இயற்கை எய்தினார் என்பதை தெரிவிக்க வருந்துகிறோம். இது குறித்து தகவலறிந்த முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள், தமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொண்டுள்ளார்.

கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:–

சிவகங்கை மாவட்டக் கழக அவைத் தலைவராகவும், தலைமை செயற்குழு உறுப்பினராகவும், சிவகங்கை நகராட்சியின் முதல் நகராட்சித் தலைவராகவும் பணியாற்றி மக்களின் நன்மதிப்பைப் பெற்ற திரு. சொ. லெ.சாத்தையா அவர்கள் மறைந்த செய்தியறிந்து மிகவும் வருந்தினேன்.

திரு. சாத்தையா அவர்களைப் பிரிந்து வாடும் அவரது குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள், கழக உடன்பிறப்புகள் அனைவருக்கும் ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு இரங்கல் செய்தியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



காஞ்சிபுரம் பேருந்து நிலையத்திலிருந்து, பல்வேறு வழித் தடங்களில் புதிய நகரப் பேருந்து சேவையை சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.எ. பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொடியசைத்து துவக்கி வைத்தார். உடன் மேயர் திருமதி மகாலட்சுமி யுவராஜ், சன்பிராண்ட் கே. ஆறுமுகம், மாநகரச் செயலாளர் சி.கே.வி.தமிழ்ச்செல்வன், எஸ்.சந்துரு, பி.எம்.குமார், பகுதிக் கழக செயலாளர்கள் கே.திலகர், அ.தசரதன், சு.வெங்கடேசன், தொ.மு.ச. நிர்வாகிகளான சுதாகர், டில்லி, மாவட்ட, மாநகர, பகுதி, ஒன்றிய, வட்ட, கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கோட்ட மேலாளர் மற்றும் போக்குவரத்து துறை